இங்கே மாண்புமிகு உறுப்பினர் சௌரிராஜன் அவர்கள் பேசுகிறபோது இந்தச் சம்பவம் சுமார் காலை 10-30 மணிக்கு நடந்தது என்ற அளவில் குறிப்பிட்டார்கள். எனக்குக் கிடைத்த தகவல் மாலை 5 மணி என்று இருக்கிறது. அதேபோல் அவர்களே பேசுகிறபோது எடுத்துச் சொன்னது போல், கலெக்டர் அவர்களின் பி.ஏ. இது குறித்து தீர்க்கமாக விசாரிக்க வேண்டுமென்று சொன்னதுபோல், பொதுமக்களும் கேட்டுக் கொண்டது போல் அந்த விசாரணையை நடத்தி வருகிறார். முழுத் தகவலும் இன்னும் கிடைக்கவில்லை. அந்த விசாரணை முடிந்து தகவல் நமக்குக் கிடைக்குமாயின் எந்தவிதமான தயவு தாட்சண்யமும் இல்லாமல் தவறு இழைத்தவர்கள் மீது தக்க நடவடிக்கை அரசு எடுக்கும் என்று கூறி, இப்போது அமைதியான சூழ்நிலை ஏற்பட்டிருக்கும் காரணத்தால் அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

3. கவன ஈர்ப்புகள்.

(அ) மேட்டுப்பாளையம் ரோடில் சாராயக் கடத்தல் கார் ஏறி காவல்துறை அதிகாரி மரணமடைந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எம். ஆறுமுகம், மு. அப்பாதுரை ஆகியோர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஓர் நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, 'கோயம்புத்தூர் மாவட்டம் அன்னூர்-மேட்டுப்பாளையம் சாலையில் சாராயம் கடத்திய காரை சோதனை போட முயன்ற காவல்துறை அதிகாரி கொல்லப்பட்டது குறித்த' அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.—

1981 பிப்ரவரி 9] [திரு. ச. இராமச்சந்திரன்]

அறிக்கை.

அரசுக்குக் கிடைத்த தகவலின்படி மேட்டுப்பாளையம் போக்குவரத்து காவல் பிரிவைச் சேர்ந்த இருப்பு சார் ஆய்வாளர் (ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்) அப்துல் குத்தாஸ் 27—1—1981 அன்று இரவு மேட்டுப்பாளையம்—அன்னூர் சாலையில் காவலர் (போலீஸ் கான்ஸ்டபில் 561) ஒருவருடன் போக்குவரத்துச் சோதனை செய்து கொண்டிருந்தார். அவர்கள் ஒரு டாக்ஸியில் (எம். டி. பி. 1227) இச் சோதனைக்கென சென்றார்கள். இரவு 2.00 மணிக்கு, அன்னூர் பக்கத்திலிருந்து மேட்டுப்பாளையத்தை நோக்கி செல்லும் அம்பாஸிடர் கார் (எம். டி. எப். 2447) ஒன்று வந்தது. இருப்பு சார் ஆய்வாளர் (ரிசர்வ் சப் இன்ஸ்பெக்டர்) காரை நிறுத்தச் சொல்லிச் சைகை செய்தார். முதலில் மெதுவாக வந்து இருப்பு சார் ஆய்வாளர் (ரிசர்வ் சப் இன்ஸ்பெக்டர்) அருகில் வந்ததும் அவரைக் கொல்லும் நோக்கத்துடன் அவர் மீது மோதி விட்டுத் தப்பித்துப் போய்விட்டது. இருப்பு சார் ஆய்வாளர் (ரிசர்வ் சப் இன்ஸ்பெக்டர்)-ஐ மோதிய பிறகு 30அடி தூரத்திற்கு அவரை இழுத்துக் கொண்டு மிகுந்த வேகத்துடன் அக்கார் சென்றது. பிறகு ஒரு மரத்தின் மீது மோதி கார் நின்று விட்டது. கார் டிரைவரும், காரிலிருந்த இருவரும் காரை விட்டு விட்டு மறைந்து விட்டனர். அப்படி மறைகின்ற அவர்களை டாக்சி ஓட்டுனர் பார்த்தார்.

2. காயமுற்ற இருப்பு சார் ஆய்வாளரை (ரிசர்வ் சப் இன்ஸ்பெக்டர்) மேட்டுப்பாளையம் அரசாங்க மருத்துவமனைக்கு மேற்படி டாக்ஸி டிரைவர் உதவியுடனும் சம்பத் குமார் என்ற பெயருள்ள வேறொருவர் உதவியுடனும் மேற்படி காவலர் 561 (போலீஸ் கான்ஸ்டேபில்) டாக்ஸியில் எடுத்துச் சென்றார். இரவு 2.20 மணிக்கு இருப்பு சார் ஆய்வாளர் (ரிசர்வ் சப்-இன்ஸ் பெக்டர்) திரு. அப்துல் குத்தாஸ் இறந்து விட்டதாக மருத்துவ அதிகாரி அறிவித்தார். இ. பி. கோ. 34, 302 ஆம் பிரிவின் கீழும், தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் 4 (1) (எ) ஆம் பிரிவின் கீழும் காரமடை காவல் நிலயத்தில் குற்ற வழக்கு (எண். 10/81) ஒன்று பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை செய்யப்பட்டது. 28—1—1981 அன்று காலை 4.00 மணிக்கு குற்றவாளி என்ற சுப்பிரமணி என்பவரை மேட்டுப்பாளையம் ஆய்வாளர் (இன்ஸ் பெக்டர்) கைது செய்தார்.

3. ஏழு சாக்கு மூட்டைகளில் மறைத்து வைக்கப்பட்ட ரப்பர் குழாய்களில் 300 லிட்டர் சாராயம் (ஐ. டி. அராக்) அக்காரில் (எம். டி. எப். 2247) கடத்தப்பட்டது. ஊட்டியிலுள்ள அக்பர் அலி என்ற பெயருள்ள சாராயம் விற்பனை செய்யும் ஒருவரிடம்

சேர்ப்பதற்காக திருப்பூருக்கு அருகிலுள்ள காவிலிப்பாளையத்திலிருந்து கள்ளச் சாராயம் எடுத்துச் செல்லப்பட்டது என்று விசாரணையின் போது சுப்பிரமணியம் ஒத்துக் கொண்டார். வேறொரு குற்றவாளி முத்துசாமி 30—1—1981 அன்று இரவு 3.00 மணிக்கு திருப்பூரில் மேட்டுப்பாளையம் ஆய்வாளரால் (இன்ஸ்பெக்டர்) கைது செய்யப்பட்டார். குற்றவாளியான டிரைவர் மருதையன் திருப்பூர் உட்கோட்ட குற்றவியல் நீதிபதி (சப் டிவிஷனல் ஜுடிஷியல் மேஜிஸ்டிரேட்) முன்னர் 30—1—1981 அன்று காலை 11-30 மணிக்குச் சரணடைந்தார்.

4. காரை மிகவும் கவனக் குறைவாகவும் அதிக விரைவாகவும் ஓட்டி காவல்துறை அதிகாரியை வேண்டுமென்றே கொல்லச் செய்தார் என்பது தெளிவாக புலன் விசாரணையில் புலப்பட்டது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. எம். ஆறுமுகம்: இங்கே வைக்கப்பட்டிருக்கக்கூடிய அறிக்கையில் சாராயத்தைக் கடத்தியவர்கள் யார் என்று சொல்லவில்லை. மேலும் திருப்பூரிலிருந்து சாராயம் குன்னூருக்குக் கடத்தப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. திருப்பூரிலிருந்து இந்தச் சாராயத்தைக் கடத்தியவர்கள் யார் என்று சொல்லவில்லை. திருப்பூரிலிருந்து அந்தச் சாராயத்தைக் கடத்தியவர்கள் யார், அந்தக் கார் யாருக்குச் சொந்தமானது என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும். போலீஸ் இன்ஸ்பெக்டர் கொல்லப்பட்டிருப்பதால் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய சாதாரண மக்களை எல்லாம் பிடித்து போலீசார் வழக்குகளைப் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? இரண்டு நாட்களுக்கு முன்னால் கூட திருப்பூரில் கள்ளச் சாராயம் விற்கக்கூடிய வியாபாரி ‘‘இங்கே கள்ளச் சாராயம் மொத்தமாகவும் சில்லரையாகவும் விற்கப்படும்’’ என்று போர்டு போட்டு விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது.

[முற்பகல் 10-40]

அரசு கள்ளுக்கடைகளையும், சாராயக் கடைகளையும் திறந்து விடுவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

* மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவா அவர்களே, இந்த வழக்கு சம்பந்தமாக யார் கடத்தினார்கள், யார் காரைத் தந்தார்கள், யார் அதற்கு உடந்தையாக இருநதார்கள் என்பது எல்லாம் அவர்களுடைய இன்வெஸ்டிகேஷனிலே இருக்கிறது. ஆனால் இந்த அறிக்கையிலே சில விவரங்கள் தரபபட்டு இருக்கின்றன. சுப்பிரமணி என்ற ஒருவர்

குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார். அதேபோல் ஊட்டியிலுள்ள அக்பர் அலி என்ற பெயருள்ள சாராயம் விற்பனை செய்யும் ஒருவரிடம் சேர்ப்பதற்காக திருப்பூருக்கு அருகிலுள்ள காவிலிப் பாளையத்திலிருந்து கள்ளச் சாராயம் எடுத்துச் செல்லப்பட்டது என்று விசாரணையின்போது சுப்பிரமணியம் ஒத்துக்கொண்டார். வேறொரு குற்றவாளி முத்துசாமி 30—1—1981 அன்று இரவு 3.00 மணிக்கு திருப்பூரில் மேட்டுப்பாளையம் ஆய்வாளரால் (இன்ஸ்பெக்டர்) கைது செய்யப்பட்டார். குற்றவாளியான டிரைவர் மருதையன் திருப்பூர் உட்கோட்ட குற்றவியல் நீதிபதி (சப்-டிவிஷனல் ஜுடிஷியல் மேஜிஸ்டிரேட்) முன்னர் 30-1-1981 அன்று காலை 11-30 மணிக்குச் சரணடைந்தார். இப்படிப் பட்ட விவரங்கள் இந்த அறிக்கையிலே ஏற்கெனவே தரப் பட்டிருக்கின்றன. தீவிரமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. அந்தப் பகுதியிலே கண்டவர்கள் மீது வழக்குப் போட்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி அவர்களுக்குத் தகவல் இருக்குமானால் அரசுக்கு அதை அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். யாரோ ஒருவர் கள்ளச் சாராயம் விற்கப்படும் என்ற போர்டே போட்டு விற்பதாகக் குறிப்பிட்டார்கள். கள்ளச் சாராயம் விற்பவர்கள் கூட அது நல்ல சாராயம் என்றுதான் போர்டு போடுவார்களே தவிர கள்ளச் சாராயம் என்று போட்டு விற்க மாட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்வது சரியல்ல என்று கருதுகிறேன். மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டுமா வேண்டாமா என்ற கொள்கைப் பிரச்சினையை இதிலே எழுப்ப வேண்டியதில்லை.

திரு. மு. அப்பாதுரை: நம்முடைய அவையே காலையிலே வள்ளுவருடைய குறளை சொல்லித்தான் ஆரம்பிக்கப்படுகிறது.

'' நோய்நாடி, நோய்முதல் நாடி, அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் ''

என்று சொன்னான் வள்ளுவன். அந்த அடிப்படையில் இந்த மாபெரும் கொலை நடைபெற்றதற்குக் காரணமே சாராயக் கடத்தல்தான். யாருக்கு அந்த சாராயம் கடத்தப்பட்டிருக்கிறது என்பதை குற்றவாளியே ஒத்துக்கொண்டு இருக்கிறார். அந்தக் கொலை நடைபெற்றதற்கு மூல காரணமாக இருந்த அக்பர் அலி என்ற சாராய வியாபாரி ஏன் கைது செய்யப்பட வில்லை ? அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல் ஒரு வழக்கு விசாரணையில் இருக்கிற போது அரசாங்கம் தலையிட்டு ஒன்றும் சொல்லக் கூடாது.

The case is under investigation என்று இருக்கிறபோது நீதிபதிகள் கூட அதிலே தலையிடமுடியாது என்பது சட்டம்.

(ஆ) வெள்ளக்கோவில் தொகுதியில் விசைத்தறிக் கூடங்கள் மூடப் பெற்றதால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் திருப்பூர் ஆர். மணிமாறன், இரா. தாமரைக்கனி ஆகியோர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஓர் நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "வெள்ளக்கோவில் தொகுதியில் விசைத்தறி உரிமையாளர்களால் முன்னறிவிப்பின்றி விசைத்தறிக் கூடங்கள் மூடப்பட்டுவிட்டதால் 4,000 தொழிலாளர்கள் வேலையின்றி இருக்கும் நிலைமை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

சட்டமன்ற LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அறிக்கை.

பெரியார் மாவட்டம், வெள்ளக்கோவில் மற்றும் அதன் சுற்றுப் புறத்தில் சுமார் 400 விசைத்தறி கூடங்கள் உள்ளன. இவைகளில் சுமார் 2,500 விசைத் தறிகள் உள்ளன. அவற்றில் 4,000 தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர். இவர்கள் பருத்தி கேஸ்மெண்ட் வகைகள் 2/17 மற்றும் 19 நூல்களைக் கொண்டு தயாரிப்பில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் கரூரில் உள்ள ஜவுளி உற்பத்தியாளர்களுக்காக துணி உற்பத்தி செய்து வருகின்றனர். பொதுவாக, விசைத்தறி நெசவாளர்கள் ஜவுளி உற்பத்தியாளர்களிடமிருந்து சாயம் தோய்த்த நூலை விலைக்கு வாங்கி, பின் அவற்றை நெய்து தீர்ந்த சரக்குகளைத்